# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஒதுக்கீடு (திருத்தம்)

***2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் 2023, யூலை மாதம் 20 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

*(2023, யூலை மாதம் 12 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ ***190 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *12.00*** **தபாற் செலவு : ரூபா *150.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** இவ்வாசகம் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் கடன்பெறும் எல்லையினை *4,979* பில்லியனிலிருந்து *13,979* பில்லியனாக அதிகரிப்பதன் மூலமும் உட்பிரிவு (4) இல் சேவை செலவினத்தை ரூபா *4,222,233,362,000* இலிருந்து ரூபா *13,222,233,362,000* ஆக அதிகரிப்பதன் மூலமும் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) *2022* ஆம் ஆண்டின் *43* ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் *2* ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 3 :*** இவ்வாசகம் ரூபா *2,019,970,000,000* இலிருந்து ரூபா *11,019,970,000,000* எனும் தொகையாக அதிகரிப்பதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையின் தலைப்பு இல. *249* இன் கீழ் காணப்படுகின்ற திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மூலதன செலவினம் எனும் நிரலைத் திருத்துகின்றது.

ச.வ.- ஒ. 41/2023

## 2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின்                ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப் படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் “நாலாயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பது பில்லியன் ரூபாவை” என்னும் சொற்களுக்குப் பதிலாக “பதின்மூவாயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பது பில்லியன் ரூபாவை” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் “நாலாயிரத்து இரு நூற்று இருபத்திரண்டு பில்லியன் இருநூற்று முப்பத்து மூன்று மில்லியன் முந்நூற்று ஆறுபத்திரண்டாயிரம் ரூபாவாகவிருத்தல்”; என்னும் சொற்களுக்குப் பதிலாக “பதின்மூவாயிரத்து இருநூற்று இருபத்திரண்டு பில்லியன் இருநூற்று முப்பத்துமூன்று மில்லியன் முந்நூற்று ஆறுபத்திரண்டாயிரம் ரூபாவாகவிருத்தல்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையின் தலைப்பு 249 இன் கீழ் காணப்படுகின்ற திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மூலதன செலவினம் என்னும் நிரலில் “2,019,970,000,000”, என்னும் எண்களுக்குப் பதிலாக

"*11,019,970,000,000*" என்னும் எண்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

***4.*** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.